# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580


ஆணை நாள் 07.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8803/B/2024**

திரு.வீ.ராஜ்குமார் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ முதல்வர்,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பருகூர்,கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 104. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (07.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.வீ.ராஜ்குமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, முனைவர் சு.காயத்ரி தேவி, முதல்வர்(மு.கூ.பொ.), அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 30.05.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (07.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 13.01.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், பருகூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் தொடர்பாக தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 05.03.2024 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் பருகூர், அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் தான் கலந்துகொள்ளவேண்டுமென்றும், மேற்படி கூட்டத்தில் நடைபெறும் கலந்துரையாடல் மற்றும் கூட்டத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் தான் கலந்துகொள்ள அனுமதி வழங்கவேண்டுமென்று கோரியுள்ளார் என்றும், தங்கள் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர்கள் கழக கூட்டத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்க இயலும் என்றும், இக்கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் வெளியாட்களை அனுமதிக்க வழிவகை இல்லாததால் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என்று தெரிவித்து, அதனையே தகவலாக மனுதாரருக்கு 29.04.2024ம் தேதியிட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்து, உரிய ஆவணங்களை ஆணையத்தன் முன்பு சமர்ப்பித்தார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பருகூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் தான் கலந்துகொள்ள தனக்கு அனுமதி வழங்கவேண்டுமென்றும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ், தான் கோரும் இந்த அனுமதி சட்டத்திற்குட்பட்டது என்றும், ஆகவே பருகூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் தான் கலந்துகொள்ள அனுமதிவழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார்.

5. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, மனுதாரரிடம், தங்கள் குடும்பத்தை சார்ந்தவர் எவரேனும், பருகூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்று வருகின்றார்களா என்றும், அல்லது தங்களின் உறவினர் எவரேனும் மேற்படி கல்லூரியில் படித்துவருகின்றார்களா என்றும், வினவியபோது, மனுதாரர் தன் குடும்பத்தை சார்ந்வரோ அல்லது தன்னுடைய உறவினர் யாரும் மேற்படி கல்லூரியில் பயிலவில்லை என்றும், தான் ஒரு குடிமகன் என்ற முறையில் மேற்படி கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் கலந்துகொள்ள தனக்கு அனுமதி வழங்கவேண்டுமென்றும் தெரிவித்தார்.

6. மனுதாரரின் கூற்றினை இவ்வாணையம் ஏற்க இயலாது. மனுதாரருக்கும் இக்கல்லூரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாத நிலையில், கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் கலந்துகொள்ளவும் அவருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றே இவ்வாணையம் தனது கருத்தினை பதிவு செய்கின்றது. ஆகவே, பொது அதிகார அமைப்பின் சார்பாக, பருகூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர்கள் கழக கூட்டத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்க இயலும் என்றும், இக்கல்லூரியில் நடைபெறும் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டத்தில் வெளியாட்களை அனுமதிக்க வழிவகை இல்லை என்றும் பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள பதில் ஏற்புடையது என்று இவ்வாணையம் தீர்மானித்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை என்று முடிவுசெய்து, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்து, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8803/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர் /முதல்வர்,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பருகூர்,கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 104.

திரு.வி.இராஜ்குமார்,
5/333, கரடிகுட்டை பகுதி,
அங்கிநாயனப்பள்ளி கிராமம் (ம) அஞ்சல்,
8வது வார்டு, ஒப்பதவாடி ஊராட்சி,
பருகூர் வட்டம்,கிருஷ்ணகிரி மாவட்டம்.

Copy to: File
Sj/Ps- 13/05/2026